

திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதி நாசரேத் பேரூராட்சி இரயில் நிலையம் எதிர்புரம் சிறுவர் பூங்காவை மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார் உடன் நாசரேத் பேரூராட்சி தலைவர் திருமதி நிர்மலா ரவி, துணைத் தலைவர் அரவிந்த் சாமுவேல், ஒன்றியச் செயலாளர் நவீன்குமார், மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரி சங்கர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், மாவட்ட வழக்கறிஞர் அணி வி.பி.செந்தில்குமார், மாவட்ட அமைப்பாளர் தெற்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி ஆவின் சேர்மன் ஒய்.எஸ்.சுரேஷ் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### காவிரி, கொள்ளிடம் பகுதிகளில்

# தடுப்பணைகள் கட்டி நிலத்தடி நீரைச் சேமிக்க கழக அரசு நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!



சென்னை, பிப்.15 - சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின்போது, இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு :-

**துரை சந்திரசேகரன்** : எங்கள் பகுதியில் கொள்ளிடம் ஆற்றில் சுமார் 35க்கும் மேற்பட்ட இடங்களில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு, நிலத்தடி நீர் எடுக்கப்படுகிறது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்துகொண்டே செல்கிறது. எனவே, கொள்ளிடம் ஆற்றில் பல இடங்களில் ஆய்வு செய்து, தடுப்பணைகள் அமைத்தால்தான் நிலத்தடி நீர்மட்டம் உயரும். அதன்மூலம் விவசாயிகளும் பாதிக்கப்படாமல், கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நீர்ச் செறிவு பெறுவதற்கு தடுப்பணைகள் அமைக்கப்படுவதற்கான திட்டம் அரசிடம் இருக்கிறதா? அவ்வாறு அமைக்கும்பட்சத்தில், என்னுடைய தொகுதிக்குட்பட்ட விளாங்குடி மற்றும் விஷணம்பேட்டை பகுதிகளில் கொள்ளிடம் ஆற்றில் இரண்டு தடுப்பணைகள் அமைப்பதாக அதிகாரிகள் கூறினார்கள். அது எந்த நிலையில் உள்ளது?

**அமைச்சர் கே.என். நேரு:** முதலமைச்சர் அவர்களிடமும், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களிடமும் இதுகுறித்து விரிவாகப் பேசியிருக்கிறோம். ஆயிரம் இடங்களுக்கும் மேலாக இத்தகைய தடுப்பணைகள் அமைக்கப்படும் என்று ஏற்கெனவே நீர்வளத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, அதற்கான பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே, உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும்.

கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக தற்போது காவேரியிலும், கொள்ளிடத்திலும் 244 இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, நிலத்தடி நீர் குறையாமல் இருக்க வேண்டுமானால், வருங்காலத்தில் தடுப்பணை கட்டினால் மட்டுமே நிலத்தடி நீரைச் சேமிக்க முடியும். அது அரசின் கவனத்திலும் இருக்கிறது. நிதிநிலைமைக்கேற்ப இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி

# மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா அறிவிப்பு!

தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் வருகிற 20-2-2024 செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் விவசாயத் தொழிலாளர் அணித் தலைவர் உ.மதிவாணன் தலைமையில் நடைபெற உள்ளது.

இதில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி - இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்கள்.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொருள் : 1. தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழா,

2. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் பணி - குறித்து

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 14.2.2024

**அன்னியூர் சிவா**
செயலாளர்
தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி

## சிலியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்!

சாண்டியாகோ, பிப். 15 – சிலி நாட்டின் தலைநகர் சாண்டியாகோவில் நேற்று காலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.0 ஆக பதிவானதாக தேசிய நிலஅதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்திய நேரப்படி நேற்று காலை 7.01 மணியளவில் சாண்டியாகோ நகரின் வடக்கே 524 கிலோமீட்டர் தூரத்தில் 30 கிலோமீட்டர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் லேசாக அதிர்ந்ததால் மக்கள் தங்களது வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் திரண்டு நின்றனர். இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாக உடனடி தகவல் எதுவும் வெளியாகவில்லை.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம்

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆற்றிய கழகப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட வாரியாக, எனது தலைமையில், மாநிலத் துணைச் செயலாளர்கள் முன்னிலையில் குறிஞ்சி இல்லத்தில் வருகிற 14 மற்றும் 15–ஆம் தேதிகளில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தாங்கள் பராமரித்து வரும் மினிட் புத்தகம், கழகப் பணிகள் குறித்த பத்திரிகைச் செய்திகள், புகைப்படங்கள் ஆகியவற்றுடன் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

ஆய்வுக் கூட்ட விவரம் வருமாறு :

| நாள் | மண்டலம் | நேரம் |
|---|---|---|
| 15.02.2024 வியாழக்கிழமை | 3 | மாலை 4.00 – 6.00 மணி |
| | 4 | மாலை 6.00 – 8.00 மணி |

அன்பகம்
சென்னை – 18.
நாள் : 10–02–2024.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

### சேலம் மாவட்டத்தில் 100 ஏரிகளுக்கு நீரேற்றி திட்டம் மூலம் நீர் நிரப்ப துரித நடவடிக்கை எடுக்கப்படும்!

# சேதமடைந்த ஏரிகள், மதகுகள் நிதி ஒதுக்கப்பட்டு விரைவில் பழுது பார்க்கப்படும்!

## சட்டப்பேரவையில் - நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அறிவிப்பு!



சென்னை, பிப். 15- சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின் போது பதிலளித்த நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், “தமிழ்நாட்டில் பழுதடைந்த ஏரிகளும், மதகுகளும் நிதி ஒதுக்கப்பட்டு பழுது பார்க்கப்படும்!” என்று அறிவித்தார்.

சட்டப்பேரவையில், நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின்போது, இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**கே.ஏ. செங்கோட்டையன்:** அத்திக்கடவு - அவினாசி திட்டம், சோதனை ஓட்டத்தின்போது, சில ஏரிகளுக்கும், குளங்களுக்கும் தண்ணீர் வரவில்லை என்ற அச்சம் மக்களிடத்தில் இருக்கிறது. அதை உடனடியாக அரசு பரிசீலிக்குமா என்பதையும், அதேநேரத்தில் விடுபட்டிருக்கின்ற ஏரிகள், குளங்களையும் சேர்ப்பதற்கு இந்த ஆண்டு முயற்சிகள் மேற்கொள்ளுமா?

**அமைச்சர் துரைமுருகன்:** இதனுடைய பணிகள் பெரும்பாலும் முடிந்துவிட்டன. சிலநேரங்களில் பைப்புகள் பதிக்கின்ற இடத்தில், அந்த நிலச்சுவான்தாரர்களுக்கு தர வேண்டிய பணம், பாக்கியிருக்கின்ற காரணத்தால், அதனைக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. விரைவில் இதன் துவக்க விழா நடத்தப்படும்.

**க.சுந்தர்:** நம்முடைய திராவிட மாடல் ஆட்சியிலே நீர்வளத் துறையிலே பல்வேறு திட்டங்கள் புதியதாகக் கொண்டுவரப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அதிலே ஏற்கெனவே காஞ்சிபுரம்செங்கல்பட்டு மாவட்டம், ஏரிகள் நிறைந்த மாவட்டம் என்று சொல்வார்கள். அந்த மாவட்டங்களிலுள்ள ஏரிகள், மதகுகள் பழுதடைந்திருக்கின்றன. எனவே, அதற்காக அமைச்சர் அவர்கள் நிதியை ஒதுக்கி, அவற்றைச் சீரமைத்திட முன்வருவார்களா?

**அமைச்சர் துரைமுருகன்:** உறுப்பினர் அவர்கள் சொன்னது உண்மைதான். பல ஆண்டுகாலமாக, அவை செப்பனிடப்படாத காரணத்தால், மதகுகள் எல்லாம் இடிந்திருக்கின்றன. இந்த ஆண்டு அப்படிப்பட்ட ஏரிகளை செப்பனிடுவதற்கு கணக்கெடுத்திருக்கிறோம். விரைவில் அதற்கான நிதி ஒதுக்கப்பட்டு, பழுதுபார்க்கப்படும்.

**ஓ.எஸ்.மணியன்:** நாகப்பட்டினம் மாவட்டத்திலும், திருவாரூர் மாவட்டத்திலும் தாளடிப் பயிர்கள் கிட்டத்தட்ட 1,51,000 ஏக்கர் மார்ச் மாதத்தில் தான் அறுவடைக்கு வரும். எனவே, பிப்ரவரி மாதம் முழுக்க அந்தப் பயிர்களுக்குத் தண்ணீர் தேவைப்படுகிறது. இரண்டு டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே திறந்து விடப்பட்டுள்ளது. விவசாயிகள், விவசாய சங்கங்கள் எல்லோருமே மேலும் 8 டி.எம்.சி. தண்ணீர் வேண்டுமென்று வேண்டுகிறார்கள். தயவு செய்து, நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், இதனைத் திறந்துவிடுவார்களா?

**ஓ.எஸ். மணியன்:** என்னைவிட, காவேரிப் பிரச்சினை, நீர்ப் பிரச்சினை தெரியும். காரணம், அவர் அங்கே வாழ்பவர், வாழ்ந்து வருபவர். இப்போது இருக்கிற நீர் குடிநீருக்கு மட்டும் தான் இருக்கிறது. அதுவும் போய்விட்டால் பாதிக்கின்ற நிலைமை ஏற்படும். இருந்தாலும் 3 டி.எம்.சி. அளவு தண்ணீர் திறந்து விட்டிருக்கிறோம். அவர்கள் அப்போதைக்கப்போது பயிரிட்டுக் கொண்டே இருந்தால், தண்ணீர் விட்டுக்கொண்டே இருக்க முடியாது. ஆகவே, விரைவில் மழை வரும் என்று எதிர் பார்க்கலாம்.

**மு.பெ. கிரி:** செங்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சாத்தனூர் அணையின் மேற்புற கால்வாய் அமைத்து, சாத்தனூர் ஏரிக்கும், குப்பநத்தம் அணையை தலைவர் கலைஞர் அவர்கள் அவர்களிடத்தில் அனுமதியைப் பெற்று கட்டித்தந்த அமைச்சர் அவர்கள், குப்பநத்தம் அணையிலிருந்து மேற்புற கால்வாய் அமைத்து, குப்பநத்தம் ஏரிக்கும் தண்ணீர் தருவதற்கு புதிய கால்வாய் அமைத்துத் தருவாரா?

**அமைச்சர் துரைமுருகன்:** விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**எடப்பாடி கே.பழனிசாமி:** சேலம் மாவட்டத்தில் நான்கு சட்டமன்றத் தொகுதி ஓமலூர், மேட்டூர், எடப்பாடி, சங்கரி. இந்த நான்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வறண்ட 100 ஏரிகளுக்கு நீரேற்றி மூலமாக நீர் நிரப்புகிற திட்டத்தை அம்மா அவர்களுடைய அரசு துவங்கியது. ஆனால் இப்போது அந்தப் பணி சுணக்கமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நீர்வளத் துறை அமைச்சர் அவர்களே நேரில் பார்வையிட்டுச் சென்று இருக்கின்றார்கள். அது வேகமாக, துரிதமாக நிறைவேற்ற இந்த அரசு முன்வருமா?

**அமைச்சர் துரைமுருகன்:** வேகமாக, துரிதமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### விக்கிரவாண்டி - தஞ்சாவூர் சாலைப் பணி: ஜூன் மாதத்திற்குள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர

# ஒன்றிய அரசை - மாநில நெடுஞ்சாலைத் துறை வலியுறுத்தும்!

## பேரவையில் - க.அன்பழகன் கேள்விக்கு - அமைச்சர் எ.வ.வேலு பதில்!



சென்னை, பிப்.15 - சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்த பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு, “விக்கிரவாண்டி - தஞ்சாவூர் சாலைப் பணியை விரைந்து முடித்து, ஜூன் மாதத்திற்குள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர ஒன்றிய அரசை, மாநில நெடுஞ்சாலைத் துறை வலியுறுத்தும்!'' என்று குறிப்பிட்டார்.

**க.அன்பழகன்:** கும்பகோணம் மாநகராட்சி, இளமசிங்கபாளையம் மற்றும் தாராசுரம் பகுதிக்கு வடக்கே உள்ள கொத்தளம் ஒத்த தெருவில் சுமார் 1,500 சௌராஷ்டிரா குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதியின் இடையிலே ஓடுகின்ற அரசளாறு மிகவும் பழமை வாய்ந்திருக்கிற ஒரு சாதாரண நடைபாலமாக இருக்கிற அந்த இடத்தில், பொதுமக்கள் அதிகமாக பயணிக்கின்ற அந்தப் பாலத்தின்மீது கனரக வாகனங்கள் செல்வதற்கேற்றவாறு மாண்பிற்கினிய அமைச்சர் அவர்கள் ஒரு பாலம் அமைத்துத் தர வேண்டுமென்று அந்தப் பகுதியிலிருக்கிற வியாபாரிகள், நீண்ட நாட்களாக இருக்கிற மக்கள் கோரிக்கையை வைத்துக் கொண்டிக்கிறார்கள். எனவே, அமைச்சர் அவர்கள் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தருவார்களா?

அதேநேரத்தில், கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் விக்கிரவாண்டி தஞ்சாவூர் சாலையை ஜூன் 2024ல் முடித்துத் தருவேன் என்ற உறுதியை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். தற்போது, 2வது மாதம் ஆகிவிட்டது. இன்னும், மீதம் 3 மாதங்கள்தான் இருக்கின்றன. எனவே, அதற்கான பணிகள் விரைவாக முடி க்கப்படுமா?

**அமைச்சர் எ.வ.வேலு:** பாலம் அமைத்துத் தர வேண்டுமென்று சட்டமன்றப் பேரவை உறுப்பினர் க.அன்பழகன் இங்கே குறிப்பிட்டிருக்கிறார். அந்தப் பாலத்தைப் பொறுத்தளவுக்கு, இப்போது அவர்கள் என்னிடத்திலே கேட்கிற கேள்வி அல்லது கொடுக்கிற கடிதத்தை வைத்துக் கொண்டு,துறையினுடைய பொறியாளர்களை அனுப்பி, அங்கு சாத்தியக் கூறுகள் இருக்குமேயானால், இந்த நிதியாண்டிலே முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு, அந்தப் பாலம் கட்டுவதற்கு வேண்டிய ஏற்படுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, விக்கிரவாண்டி- தஞ்சாவூர் சாலை என்பது எல்லோருக்கும் தெரிந்து விஷயம். அந்தச் சாலை முழுக்க, முழுக்க தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் போடப்படுகிறது. அதிலே மூன்று ஒப்பந்ததாரர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களைச் சந்திக்கின்றபோது அதுகுறித்து கடிதம் கொடுத்தார்கள். நானும் தொடர்ந்து ஒன்றிய அரசாங்கத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கிறேன். அதற்குப் பிறகு நிலுவையில் இருந்த பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்வியை மையமாக வைத்துக் கொண்டு, தொடர்ந்து அதிகாரிகளை வலியுறுத்தி, இந்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கு வேண்டிய முயற்சிகளை துறையின் சார்பாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

# உண்மையான நையாண்டிப் போலி!

## ‘தி இந்து’ ஆங்கில நாளேடு தலையங்கம்!

சென்னை, பிப். 15 - மாநில அரசுடன் ஆழமாக கருத்து மாறுபடுகின்ற ஓர் ஆளுநர் பதவியில் நீடிக்க கூடாது என ‘தி இந்து’ ஆங்கில நாளேடு ‘தலையங்கம்’ வெளியிட்டுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:-

ஒவ்வொரு ஆண்டும் சட்ட மன்ற முதலாவது கூட்டத்தொடரில் வழக்கமான ஆளுநரின் உரை, அதிகமாக அரசியலாக்கப்படுகிறது. புனிதமான (சட்டமன்ற) நிகழ்வை மறைக்கின்ற அப்படிப்பட்ட பண்பற்ற தகுதியற்ற, ஒவ்வாத கருத்து மாறுபாடுகளுக்குள் ஆளுநர் மாளிகையில் பதவியிலிருப்பவர்களே அடிக்கடி காரணமாக இருக்கின்றனர்.

அண்மை நிகழ்வில், தி.மு.க. அரசினால் தயாரிக்கப் பெற்ற உரையைப் படிக்க தம்மால் இயலாதென்பதை. தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். இரவி தெரிவித்தார்; அந்த உரையில் பல பகுதிகளில் தவறாக வழிநடத்தும் உரிமைக் கோரிக்கைகளும் தகவல்களும் இருந்ததாகக் குறிப்பிட்டிருந்தார். அவற்றைப் படிப்பதென்பது ஆளுநர் உரையை “அரசமைப்புச் சட்ட நையாண்டிப் போலியாக” ஆக்கிவிடக் கூடும் என்று அவர் கூறினார்.

இந்த அரசியல் சட்டப் பிணக்கை அல்லது குறும்புத் தனத்தை பிரிவினைக் கோரிக்கையுடன் சேர்த்துக் குழுப்பிக்கொண்டு, ஆளுநர் உரையின் இறுதியில் மட்டுமே நாட்டுப்பண் (தேசிய கீதம்) இசைக்கப்பட்டதாகவும், தொடக்கத்தில் இசைக்கப்படவில்லையென்றும் கூறி அதைப் பெரிதுபடுத்த முயன்றார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசால் தயாரிக்கப்பட்ட உரையைப் படித்திட மறுக்கின்ற ஒருவர்தான் (ஆளுநர்) உரையை கேலிக்குரிய, நையாண்டிக்குரிய போலிமையாக ஆக்கினார் என்பது நாடாளுமன்ற மக்களாட்சி முறையில் ஓர் ஆளுநரின் பங்கு பற்றி புரிந்து கொள்கிற எவருக்குக் தெரியும். அரசியல் களத்தில் தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றிபெறுகின்ற கட்சிகளால்தான் அரசாங்கங்கள் நடத்தப்படுகின்றன. கொள்கை அறிக்கைகளில் உண்மையாகவோ மிகைப்படுத்தியோ தங்களுடைய சாதனைகளைப் பறைசாற்றிக் கொள்ள முயல்வது எதரிபார்க்கப்படக் கூடியதுதான். எதிர்க் கட்சியினரும் மக்களும் தான் இவ்வுரையின் உள்ளடக்கப் பொருளைப் பற்றித் தீர்மானிக்க வேண்டியவர்களே தவிர, ஆளுநர் அல்லர்.

வழக்கமான உரையை அதிலிருந்த தகவல் அடிப்படையிலும் தார்மிக அடிப்படையிலும் இரவி படிக்க மறுப்பதன் நிலைக்கக் கூடிய தன்மையை அறிந்திட ஒருசிறிய சோதனை, பாரதிய ஜனதா கட்சி ஆட்சி நடத்தும் ஒரு மாநிலத்தின் ஓர் ஆளுநரோ, குடியரசுத் தலைவரோ இவ்வாறு செய்வாரா? என்கிற கேள்வியை எழுப்புவது தான். தவறாக வழிநடத்துகின்ற அல்லது தவறான தகவல் என்று துல்லியமாக அவர் எதையும் கூறிடவில்லை; ஆளுநரின் உரையில் ஒன்றிய அரசைக் குறை கூறக்கூடாது. விமரிசிக்கக்கூடாது என்றோ, ஒன்றிய அரசின் கொள்கைகளுக்கு எதிராக கொள்கை அறிவிப்புகள் எதையும் செய்திடக் கூடாது என்றோ கோருவது, அரசமைப்புச்சட்டப்படி ஆதாரங்கொடுத்து நிலைநிறுத்த முடியாத தாகும்.

ஆளுநர் உரையின் தமிழாக்கத்தை பேரவைத்தலைவர் படித்தபின்பு ஆளுநர் மீது கண்டனக் கணையை பேரவைத்தலைவர் தொடுத்திருக்கக்கூடாதென்கிற ஆளுநரின் கருத்து நியாயப் படுத்தப்படக்கூடியதாகும். அரசியல் சட்டப்படி கடமையாற்றுவோரின் அப்படிப்பட்ட நடத்தை பேரவையின் கண்ணியத்தைக் குறைவுபடுத்தி விடும்.

மத்தியில் ஆளும் கட்சியின் அரசியல் முகவர்களாகச் செயல்படுகின்ற ஆளுநர்களின் மனப்பாங்கு பெரும் பிரச்சினையாக இன்னமும் இருக்கிறது. நாட்டில் ஆளுநர் பதவி வகித்திட, பட்டறிவுடைய, சமுதாய மதிப்புக்குரிய உயர்நிலையினர் ஒரு போதும் குறைவாக இல்லை; ஆனால் ஒருமுறை பணியமர்த்தப்பட்டுவிட்டால் அவர்கள் அரசியல் புதார்க் காட்டுக்குள் நுழைவதற்கு அதே அளவுக்கு ஆர்வமாக இருக்கின்றனர். இதுவே இந்திய, அரசமைப்புச் சட்டமுறையின் கெட்ட வாய்ப்பான தனிச்சிறப்புக் கூறாகும். அரசியல் எதிரிகளால் நடத்தப்படும் அரசாங்கங்களுக்கு எதிராக இரகசியமாக கீழறுப்பு வேலை செய்தல், இடையூறு செய்தல் ஆகியவற்றை தங்களுடைய கடமைகள் என்று அவர்சள் நம்புகின்றனர் போலும்.

உண்மையான நையாண்டிக்குரிய கேலிக்குரிய போலி மை என்பது, கேள்விக்குரிய அல்லது பிரச்சினைக்குரிய உரிமைகோரல்களின் முறைப்படி தயாரிக்கப்பட்ட உரையில் இல்லை, ஆனால் பதவியில் இருக்கிற போது. அந்தக் கொள்கையுடன் ஆழ்ந்து முரண்படுகின்ற அல்லது அதனை ஏற்க மறுத்திடும் ஓர் ஆளுநரிடத்தில்தான் உள்ளது.

இவ்வாறு ‘தி இந்து’ நாளேடு தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.